**திம்புலாகல பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திம்புலாகல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

களஞ்சிய பொருட்கள் சம்பந்தமாக பின்பற்றப்பட வேண்டிய களஞ்சிய முற்பணக் கணக்கு முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிலே வேலை முடிவடைந்திருந்த புதிய பிரதேச சபை காரியாலய கட்டிடம் மூலதனக் கிரயம் மற்றும் முன்னைய வருடத்திலே வேலை முடிவடைந்திருந்த ரூபா 5,140,857 ஆன விஜயபாகுபுர தகனமிடும் இடத்தின் கிரயம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய மைத்ரீ விளையாட்டு மைதானம், வார சந்தைக்குரிய 02 இடங்கள் மற்றும் 50 மயான பூமிகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிலே காரியாலய வாகனக் கூடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,649,384 மற்றும் அரலங்வில சந்தை பூமியைச் சுற்றி கம்பி வேலி மற்றும் பாதுகாப்புக் கதவு பொருத்துவதற்கு செலவிடப்பட்டிருந்த ரூபா 5,065,504 மூலதனச் செலவு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2008 ஆம் ஆண்டிலே மாகாண சபைகள் திணைக்களத்தினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 541,000 பெறுமதியான அரிசி மாவினாலான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய உபகரண தொகுதியை மீளாய்வாண்டில் நவம்பர் 14 ஆம் திகதி மின்னேரியா இராணுவ ஆயுதப்படை பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்த போதும், அதன் பெறுமதி கணக்குகளில் பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிலே கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 74,500 பெறுமதியான விரல் அடையாள இயந்திரம் மற்றும் ரூபா 60,925 பெறுமதியான அழைப்பு உபகரணத் தொகுதிக்கு உரிய செலவு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னைய வருடத்தின் திசெம்பர் மாதத்தின் சம்பள மீள் நிரப்பலுக்காக ரூபா 2,471,241 வான தொகை மீளாய்வாண்டில் பெறப்பட்டிருந்த போதிலும் அந்த தொகை இன்னும் கடன்பட்டோராக பரீட்சை மீதியில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் மின்சார உபகரண தொகையாக ரூபா 247,695 காணப்பட்டபோதும் அது ரூபா 168,910 வாக ரூபா 78,785 குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2013 வருடத்திலே மீண்டுவரும் செலவினங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த மனம்பிட்டிய வாரச்சந்தை கட்டிட நிர்மாணங்களுக்காக செலவான ரூபா 1,543,510 பணம் மீளாய்வாண்டிற்குள்ளேயும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சபைக்குரிய மனம்பிட்டி மற்றும் நுவரகல நூலகத்திற்காக மீளாய்வாண்டிலே கிடைக்கப்பெற்றிருந்த புத்தகங்களின் பெறுமதி ரூபா 193,515 ஆக இருந்த போதிலும், அது ரூபா 213,360 ஆக கணக்கு வைக்கப்பட்டதனால் ரூபா 19,845 கூடுதலாக கணக்குகளில் காட்டப்பட்டுள்ளன.

(ஒ) மீளாய்வாண்டிலே பல்வேறுபட்ட ஏற்பாடுகளுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்த 10 அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 7,272,878 மற்றும் அதற்காக வழங்கப்பட வேண்டிய ரூபா 7,272,878 வேலையின் கடன்பட்டோர் மற்றும் வேலையின் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

(ஓ) மீளாய்வாண்டிலே வருமான செலவு கணக்குகளில் மூலதன வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 5,640,443 பணத்திற்குள் முன்னைய வருடத்திற்கு மற்றும் அதற்கு முன் வருடத்திற்கு உரிய கிடைக்கப்பெற்ற ரூபா 3,984,405 உள்ளடக்கப்பட்டிருந்ததாகவும் மீளாய்வாண்டின் வருமானம் அந்த அளவில் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஔ) முன்னைய வருடத்தில் உடைத்து ஒதுக்கப்பட்டிருந்த எல்லேவெவ வாரச்சந்தை நீர்த்தாங்கியின் பெறுமதி ரூபா 178,845 கணக்குகளில் நீக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த 06 கணக்கு விடயங்களின் மீதிகளின் பெறுமதிகள் மற்றும் அதற்குரிய உப ஏடுகளில் காணப்படுகின்ற மீதிகளின் பெறுமதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 3,453,538 தொகையான வேறுபாடு நிலவியது.

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

தேவையான தகவல்களை முன்வைக்காமையால் ரூபா 157,538,297 தொகையான 10 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுமார் 4 மற்றும் 7 வருட காலத்திற்கு அதிகமான காலமாக நிதிக்கூற்றுக்களில் தொடர்ந்தும் காண்பிக்கப்படுகின்ற ரூபா 1,000,023 மொத்தத்தின் சந்தை வரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் வருடம் முதல் 2014 ஆம் ஆண்டு வரை வேலையின் கடன்கொடுத்தோர் மீதியாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 4,406,384 தொகையை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டம் | | - | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாமல் இயங்கிய 48 நிறுவனங்களுக்கு எதிராக தேவையான செயல்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| | (i) | விதிகள் இலக்கம் 59 இலிருந்து 63 வரை | - | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் கணக்கெடுப்பொன்றை மேற்கொண்டு தொழிற்சாலை மற்றும் வர்த்தக வியாபாரம் சம்பந்தமான பட்டியலொன்றை தயாரித்திருக்கவில்லை. |
| | (ii) | 119 ஆவது விதிகளில் இருந்து 121 ஆவது விதிகள் வரை | - | வாராந்தச் சந்தை குத்தகைக்காக உப விதியை ஸ்தாபிப்பதற்கு செயற்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 180 விதிகள் | - | உடமைகள், பணம், முத்திரைகள் போன்றவற்றுக்கு பொறுப்பாகவுள்ள எந்த உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 197 விதிகள் | - | களஞ்சிய பொறுப்பாளரின் அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் குறிப்புக்கள் சரியானதென பரிசோதிக்கப்பட்டு, சரியானதென செயலாளரினால் சான்றுறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 203 விதிகள் | - | சபைக்கு சொந்தமான 23 வாகனங்கள் சம்பந்தமாக பல வருடங்களாக வருடாந்த வாகன கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 212 விதிகள் | - | கொள்வனவு செய்யப்படும் அனைத்து பொருட்களும் இருப்புப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட வேண்டுமெனினும், மின்சாரப் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள் உட்பட 17 வகை உருப்படிகள் இருப்பு புத்தக மீதிகள் மற்றும் பௌதீக மீதிகளுடன் 631 அலகுகளில் வேறுபட்டுக் காணப்பட்டது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | |
| (i) | நிதிப்பிரமாணம் 177(1) | | வெளிக்கள உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்படும் அரச நிதி ஒவ்வொரு நாளும் செலுத்தப்பட வேண்டுமெனினும் வருமான பரிசோதகரினால் வெளிவாரியாக சேகரிக்கப்படும் பணத்தை காரியாலயத்திற்கு செலுத்துவதற்கு 03 நாட்கள் முதல் 19 நாட்கள் வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. |
| (ii) | நிதிப்பிரமாணம் 343 | | உப கையேட்டுப் புத்தக படிவம் தொலைந்தது சம்பந்தமாக பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 396 | 37,497 | வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவுக்காக சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை மிகைத்துள்ள 8 காசோலைகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 802(3) | - | வாகனம் சம்பந்தமாக கொள்வனவு செய்த திகதி, திருத்த வேலைகளுக்கான செலவு, |

| | | | |
|---|---|---|---|
| | | | விளைவற்றுக் காணப்பட்ட கால அளவு போன்ற தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | - | சபைக்கு சொந்தமான கணனி மற்றும் கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மாகாண சபைகள் ஆணையாளரின் சுற்றறிக்கை | - | |
| | i. 1980 திசெம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | சபைக்கு சொந்தமான கடைகளை மதிப்பீட்டிற்கு உட்படுத்தாதிருந்ததுடன் 1992 ஆம் வருடத்திலே மேற்கொண்டிருந்த மதிப்பீட்டின் அடிப்படையில் கூலி அறவிடப்பட்டிருந்தது. |
| | ii. 2015 திசெம்பர் 04 ஆந் திகதிய NCP/LG/AC/04/01/02 ஆம் இலக்க கடிதம் | 209,095 | அனுமதிக்கப்பட்ட எரிபொருள் எல்லையை விஞ்சி மீளாய்வாண்டிலே சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான மாதங்களில் 2201 லீற்றர் டீசல் பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2012 யூலை 22 ஆந் திகதிய பெறுகைக் கைந்நூலுக்கான மேலதிகம் - 25 | 40,500 | 2 மில்லியனுக்கு அதிகமான பெறுகைகள் கூட்டங்களுக்காக கொடுப்பனவு பெற்றுக்கொள்ள முடியுமெனினும், அதற்கு குறைவான கொள்வனவிற்காக விலை மனுக்கோரல் சபை கொடுப்பனவுக்காக மீளாய்வாண்டில் 12 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,190,619 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய செலவினம் ரூபா 12,233,446 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 17,070,200 | 22,580,761 | 21,187,110 | 8,446,840 | 25,866,000 | 17,605,708 | 16,241,253 | 7,053,118 |
| ii. | வாடகை | 9,509,256 | 3,633,389 | 3,519,609 | 1,383,203 | 13,938,656 | 3,761,892 | 3,818,999 | 837,174 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,792,000 | 2,783,037 | 2,793,477 | 2,065,779 | 5,513,000 | 2,310,283 | 2,326,568 | 1,438,570 |
| iv | ஏனைய வருமானம் | 8,109,400 | 10,984,334 | 3,970,325 | 13,660,545 | 79,354,000 | 11,310,036 | 8,979,256 | 6,646,487 |
| | | 37,480,856 | 39,981,521 | 31,470,521 | 25,556,367 | 124,671,656 | 34,987,919 | 31,366,076 | 15,975,349 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காக மதிப்பிடப்பட்ட முழு வருமானம் ரூபா 37,480,856 ஆக இருந்தாலும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 31,470,521 ஆகும். மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் முழு நிலுவை வருமானம் ரூபா 25,556,367 ஆகும்.

### 2.2.3 குத்தகை வாடகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 17 கடைகளுக்காக குத்தகையாளர்களுடன் செல்லுபடியாகும் ஒப்பந்தங்களுக்கு முனைந்திருக்கவில்லை.

(ஆ) கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது செல்லுபடியாகும் ஒப்பந்தங்களுக்கு முனையாததனால் அறவிடப்பட வேண்டிய கூலியை அறவிட முடியாதிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது 11 கடைகளுக்கான அறவிடப்பட வேண்டிய கூலி ரூபா 246,020 ஆகும்.

(இ) சபைக்கு சொந்தமான அரலங்கவில வாராந்த சந்தையை குத்தைக்கு வழங்குவதற்காக பிரதேச சபை மற்றும் குத்தகைக்கு பெற்றுக்கொள்வோருடன் மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தத்தின் படி அனைத்து பணங்களும் 2017 மே 31 ஆந் திகதிக்கு முன்னர் செலுத்தி முடிவடைந்திருக்க வேண்டுமெனினும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகியும் ரூபா 137,160 நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.4 ஏனைய வருமானம்

சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட 04 நீர் செயற்திட்டங்களின் நிலுவை நீர் வருமானம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது ரூபா 7,371,366 ஆகும்.

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணங்கள் ரூபா 12,904,995 தொகை மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 755,500 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மாகாண வீதி அபிவிருத்தி செயற்திட்டத்திற்கு உரிய பிரதான அமைச்சரின் அனுமதி பெறப்பட்டிருந்த 14 கிராம சேவையாளர் பிரிவின் 53.5 கிலோ மீற்றர் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாமல் வேறு வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) உப விதிகள்**

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பந்தியின் பிரிவின் கீழ் பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக அவசியமான உப விதிகள் விதிக்காமலிருந்ததுடன் மாகாண சபைகள் விடயங்கள் பொறுப்பான அமைச்சரினால் விதிக்கப்பட்டிருந்த உப விதிகளை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

உப விதிகளை இனங்கண்டு கொள்ளாமை, சபையினால் நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) திம்புலாகலை பிரதேச சபையின் குப்பைகளை கொட்டுவதற்காக இலங்கை மஹவெளி அதிகாரசபையின் மூலம் அரலகங்விலை தம்பகஹ உள்பத்த பிரதேசத்திலே 05 ஏக்கர் காணி 2012 ஆம் வருடத்திலே வழங்கப்பட்டிருந்த போதும் அந்த காணியின் உரிமையை சட்டரீதியாக மாற்றிக் கொண்டிருக்கவில்லை.

(ii) சபையினால் தினந்தோறும் சேகரிக்கப்படும் 7.5 தொன் இற்கும் அதிகமான குப்பைகளை முறையான வேலைத்திட்டமொன்றை பின்பற்றாமல் வெற்றுக் காணியொன்றில் கொட்டப்பட்டிருந்தன.

(iii) 2016 ஆம் வருடத்திலே குப்பைகளை அகற்றும் செயற்திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் அப்படி ஒரு செயற்திட்டத்தை ஆரம்பித்திருக்கவில்லை.

(iv) 2014 ஆம் ஆண்டில் ஏப்ரல் 20 ஆந் திகதிய 2015/33 ஆம் இலக்கம் உடைய வர்த்தமானி அறிவித்திலின் மூலம் முன்மொழியப்பட்ட மக்கள் பாதுகாப்பு சட்டத்தின் 42 ஆவது அதிகாரத்தின் கீழ் கழிவுகளை வெளியேற்றுதல், ஒன்று சேர்த்தல், தற்காலிகமாக களஞ்சியப்படுத்தல், மீள் தயார் செய்தல், வேறுபடுத்தல், தீர்வெடுத்தல், வெளி அகற்றுதல் மற்றும் விற்பனை செய்தல் என்பன மாகாண சபையின் நிறுவனம் என்ற வகையில் நிறைவேற்றப்பட வேண்டிய அத்தியாவசியமான சேவைகளாக நியமிக்கப்பட்டிருந்தாலும் அதற்காக சபையினால் போதுமான அளவு அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக எந்தவிதமான தெளிவும் சபைக்கு இல்லாதிருந்ததுடன் அதன் காரணமாக மேற்படி ஆயத்தமாவதற்கு தேவையான,

(i) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை இனங்காணல்.

(ii) இலக்குகளை அளவிடுவதற்காக குறிகாட்டிகளை இனங்காணல்.

(iii) மேற்படி பணிகளுக்காக நிதியேற்பாடுகளை ஒதுக்கீடு செய்து செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கி தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களை இனங்காணல்.

(iv) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல் தொடர்பில் அக்கறை கொண்ட தரப்பினரை (Stake Holders) இனங்காணல்.

(v) இனங்காணப்பட்ட நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அளவீடு செய்வதற்காக தரவுத் தகவல்களை அடையாளப்படுத்தல், சேகரித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தல் போன்ற எந்தவிதமான செயற்பாடும் 2018 மே 02 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிலே சபைக்கு சொந்தமான பெகோ இயந்திரம் மோட்டார் கிறேடர், கல் அமுக்கி, பவுசர் மற்றும் கலிபவுசர் போன்றவற்றை கூலிக்கு வழங்குதல் மூலம் ரூபா 1,356,430 வருமானம் பெறப்பட்டிருந்தபோதும், அது சம்பந்தமாக வாகன கூலி வருமான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சென்ற வருடத்திலே பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி இன்வென்ட்ரீ செய்யப்படாத 240 உருப்படிகள் 2017 திசெம்பர் 11 ஆந் திகதியாகும் போதும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை விநியோகிக்கப்பட்டிருந்த 21 வெளிக்கள வருமான பில் புத்தகம் மற்றும் சிரசீது புத்தகங்களை பாவித்த பின்னர் முடிவடைந்ததை மீண்டும் சபைக்கு ஒப்படைக்காதது சம்பந்தமாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களின் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச சபைக்கு சொந்தமான 03 வாகனங்களுக்கு அரச இலச்சினை மற்றும் சபையின் பெயர் என்பவற்றை குறிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) வருடாந்த இடமாற்றக் கொள்கைக்கு இணங்க இடமாற்றம் பெற்றுக்கொள்ளாமல் ஒரே நீர் செயற்திட்டத்தில் 06 வருடங்கள் முதுல் 10 வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு சேவையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

(ஊ) நேரடி உழைப்பின் கீழ் வாகனங்கள் நிறுத்தி வைக்கும் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,518,628 பெறுமதியான பொருட்கள் மற்றும் உபகரணங்களை பதிவுக்குட்படுத்தாமல் விநியோகிக்கப்பட்டிருந்தது.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

-------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் பிரதேச சபையின் இரண்டாம் நிலையிலுள்ள 11 பதவிகளுக்கும் மற்றும் ஆரம்ப நிலையிலுள்ள 07 பதவிகளுக்கும் வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஆரம்ப நிலையிலுள்ள 12 பதவிகளுக்கு மிகை காணப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு உட்படாத அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் 16 சேவையாளர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) திம்புலாகல பிரதேச சபையால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டு 6 வருடங்கள் முதல் 8 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த 06 சேவையாளர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2012 ஆம் வருடத்திலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குள் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வு பெற்றுச் சென்ற 05 சேவையாளர்களின் சேவை கடனான ரூபா 320,594 வை அறவிட்டிருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான 10 உருப்படி சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது பத்திரிகை விளம்பரங்களை மேற்கொண்டு பகிரங்க விலை மனுக்கோரல் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் சம்பந்தமாக பெற்றுக்கொள்ளல் மற்றும் விநியோகித்தல் கட்டளை பாவிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீர் செயற்திட்டத்திற்காக குழாய் இடுகின்றதில் ஏற்பட்ட பலவீனங்கள் காரணமாக எல்லையில் அமைந்திருந்த கிராமங்களுக்கு தொடர்ச்சியாக மற்றும் போதுமான அளவு நீர் கிடைப்பதில்லையென பாவனையாளர்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருந்தன. சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற நீர் செயற்திட்டங்களின் நீரைப் பெற்றுக்கொள்வதற்காக புதிய நீர் தொடர்புகளுக்கான விண்ணப்பங்கள் 270

க்கும் அதிகமான அளவு கிடைக்கப்பெற்றிருந்த போதும் அதற்காக புதிய நீர் தொடர்புகளை பெற்றுக்கொடுப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 8,179,425 செலவு செய்து 2015 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சிரிபுர நீர் செயற்திட்டத்தின் நீர்த்தாங்கி சரியான தரத்தில் நிர்மாணிக்காததன் காரணமாக தாங்கியின் வடிகட்டி பொருத்தப்பட்டுள்ள கொங்கிறீட் தட்டு 2018 பெப்ரவரி மாதம் உடைந்து விழுந்ததனால் மணல் வடிகட்டலுடைய தாங்கியை பாவனைக்கு உட்படுத்தாமல் கைவிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்திற்கு புதிதாக பொருத்தப்பட்டிருந்த மோட்டரில் நன்ரிட்டன் வேல்வ் செயலிழந்ததால் பாவனைக்குட்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்படுகின்றது.

(உ) சபைக்கு சொந்தமான திம்புலாகல, வெஹெரகல மற்றும் சிரிபுர நீர் செயற்திட்டங்களின் போது நீர் சுத்திகரித்தலின் போது மண்டி இறங்கும் படிமுறைகள் பின்பற்றப்படாமல் தினந்தோறும் சலவைத்தூள் கலவை இடுதல் மாத்திரம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. செயற்திட்டங்களில் மணல் வடிகட்டி சுமார் 30 வருட காலத்திற்கு முன் இடப்பட்ட மணல் தட்டை சம்பூரணமாக அகற்றி புதிதாக மண் தட்டை இடாததனால் நீர் சுத்திகரித்தல் செயற்பாடு தோல்வியடைந்திருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) விளைவற்ற மற்றும் குறை உபயோகமான சொத்துக்கள்

(i) சபைக்கு சொந்தமான ரூபா 2,087,037 பெறுமதியான 06 கட்டிடங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

(ii) நுவரகல, வெஹெரகல மற்றும் சிரிபுர நீர் செயற்திட்டங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த கலோரின் இடப்படுகின்ற இயந்திரக் கட்டமைப்பு செயலிழந்து காணப்பட்டது.

(iii) கிராமிய வீதியின் முன்னோடி செயற்திட்டத்தின் மூலம் வீதிகளை பராமரிப்பதற்காக 2014 சனவரி 20 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 243,750 பெறுமதியான கொங்கிறீட் கலவை இயந்திரம் 2018 ஏப்ரலில் 29 ஆந் திகதியிலும் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொள்ளல்

(i) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகளில் 214 விதியின் பிரகாரம் சபையின் சொத்துக்கள் விடயமாக பூரணமான கணக்கெடுப்பொன்று இடம்பெற வேண்டுமெனினும் 2017 ஆம் ஆண்டிற்கான கணக்கெடுப்பு 2018 ஏப்ரல் மாதமான போதும் இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன் பல காலங்களாக சபைக்கு சொந்தமான 02 நூலகங்களின் புத்தகங்கள் சம்பந்தமாக கணக்கெடுப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகளில் 218 விதியின் பிரகாரம் சபைக்கு சொந்தமான அனைத்து காணி மற்றும் கட்டிடங்கள் வருடாந்த கணக்கெடுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்க வேண்டுமெனினும் சபையினால் அவ்வாறான கணக்கெடுப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

**(இ) வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

சபைக்குச் சொந்தமான ரூபா 127,032 பெறுமதியான வெஹெரகல பாலர் பாடசாலை கட்டிடத்தில் வெளிநபரினால் பாலர் பாடசாலை கட்டிடத்தில் பாலர் பாடசாலை ஒன்று நடாத்தப்பட்டு வருவதுடன் அதற்காக முறையான ஒப்பந்தமொன்றிற்கும் முனைந்திருக்கவில்லை. இன்னும் கட்டிடத்திற்கான மாதாந்த கூலியையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஈ) உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பாவனைக்குட்படுத்தல்**

சபையினால் பாவனைக்குட்படுத்தப்படுகின்ற காணிகள் எதற்கும் உரிமைப் பத்திரம் அல்லது உரிமை மாற்றம் சான்றிதழ் பெறப்பட்டிருக்கவில்லை

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2002 யூலை 24 ஆந் திகதிய 20/2002 இலக்கமுடைய மாகாண சபைகள் நிறுவனத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் வீதி அடையாளங்கள் அல்லது உரிமை மாற்றம் செய்ய முடியாத சான்றிதழ் விநியோகித்தலின் பரீட்சித்தல் கட்டணம்.தெளிவாக வர்த்தமானி அறிவித்திலின்றி வெளிவாரி பரிசோதனைகளுக்கு பங்கேற்கும் உத்தியோகத்தர்களினால் அறவிடப்படும் பரிசோதனைக் கட்டணத்தில் 50 சதவீதத்தை அவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிலே அப்படியாக கொடுக்கப்பட்ட கொடுப்பனவுகள் ரூபா 40,875 ஆகும்.

(ஆ) டென்டர் சபை கொடுப்பனவை பெற்றுக்கொள்வதற்காக காரியாலய நேரத்திற்கு அப்பாற்றப்பட்ட வேளையிலேயே கூட்டங்களை நடாத்த வேண்டியிருந்த போதிலும், காரியாலய நேரத்திற்குள் இடம்பெற்ற டென்டர் சபை கூட்டங்களுக்காக மீளாய்வாண்டிலே 12 சந்தர்ப்பங்களிலே ரூபா 40,500 டென்டர் சபை கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது.

### 3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) DDD/HO/3/ACC/LG இலக்கமுடைய 2014 நவம்பர் 17 ஆந் திகதிய திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி மக்கள் உபயோகத்திற்காக 2014 ஆம் ஆண்டிலே சபைக்கு வழங்கப்பட்டிருந்த 360 கல்வனைஸ் கொடி கம்பங்களை சபையின் முன்னால் தலைவர் மற்றும் 06 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு 03 வருடங்கள் கடந்திருந்தபோதிலும் அவற்றை மீண்டும் கையளித்திருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டிலே கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,299,880 பெறுமதியான 10 லெப்டொப் கணனிகளை முன்னால் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் சபை கலைக்கப்பட்டு 2 ½ வருடங்களுக்கு அண்மித்த காலமாகியும் அவற்றை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மனம்பிட்டிய பொது நூலகத்தின் நூலக பொறுப்பாசிரியரினால் 2015 ஒக்டோபர் 10 ஆந் திகதி நூலகத்தை கையளிக்கும் போது நூலகப் புத்தகங்கள் 2,246 குறைபாடுகள் காணப்பட்டதுடன், பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) வெஹெரகல, சிரிபுர மற்றும் நுவரகல நீர் செயற்திட்டங்களின் பாவனையாளர்களின் 1077 நீர் மானிகள் 1 மாதம் தொடக்கம் 12 மாதங்கள் வரையான காலப்பகுதிக்கு முன்பே செயலிழந்து காணப்பட்டிருந்ததுடன், நீர் பாவனையாளர்களிடமிருந்து மாதாந்தம் ஒரு குறிப்பிடப்பட்ட தொகை மாத்திரம் அறவிடப்பட்டமை பாவனைக்கு உட்படுத்தப்பட்ட நீர் அளவுக்கு கட்டணங்கள் அறவிடப்படாமையால் அடிக்கடி நீர் செயற்திட்டம் நட்டத்திற்குள்ளாகின்ற நிலைமைக்கு தள்ளப்பட்டிருந்தது.

**3.8 வெளிப்படையான மோசடிகள்**

2016 யூன் மாதத்திலிருந்து 2017 யூன் மாதம் வரையான காலத்திற்குள் நீர் செயற்திட்ட காரியாலயங்களினால் பிரதேச சைபக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,444,137 தொகையில் ரூபா 2,625,660 மற்றும் சிரிபுர நீர் செயற்திட்டத்தின் 16,720 தொகை சம்பந்தமாக நிதி மோசடி இடம்பெற்றிருந்தது. இது சம்பந்தமாக 2018 ஏப்ரல் 28 ஆந் திகதி வரையில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9 பெறுகைகள்**

**3.9.1 பெறுகைகள் திட்டம்**

மீளாய்வாண்டிலே மூலதனச் செலவினங்களுக்காக ரூபா 6,965,702 ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தாலும் அதற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.9.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையின் வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கான கட்டிட நிர்மாண வேலைகள் சம்பந்தமாக சபையின் தொழில்நுட்ப உதவியாளர் உத்தியோகத்தர்களினால் தயாரிக்கப்பட்டிருந்த ரூபா 3,539,156 ஆன பொறியியலாளர் மதிப்பீட்டிற்கு, பொறியியலாளர் அனுமதி மற்றும் மாகாண சபைகள் ஆணையாளரின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 20 மாகாண வீதிகள் அபிவிருத்தி செயற்திட்டங்கள் சம்பந்தமாக செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) அரலகங்வில வாராந்த சந்தை காணியில் 12 கடைகளை நிர்மாணிப்பதற்காக 2014 ஆம் ஆண்டிலே ரூபா 11,579,412 மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்ததுடன், 5 கடைகளுக்காக அத்திவாரமிட்டு கொங்கிறீட் தூண்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 939,167 செலவிடப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் உரிய கடைகளை நிர்மாணித்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிலே கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமாக கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

பிரதேச சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை உருவாக்கி காலத்திற்குரிய கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2017 மாகாண வீதிகளை மேம்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட செயற்திட்டத்திற்காக 4,010,000 ஒதுக்கப்பட்டிருந்தாலும் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்திட்டத்திற்காக ரூபா 1,832,810 மாத்திரம் செலவிடப்பட்டதனால் அதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,177,690 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளின் குறைபாடுகள் அடிக்கடி பிரதேச சபையின் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டது. கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| கட்டுப்பாட்டுத் துறைகள் | | கவனம் செலுத்த வேண்டியவைகள் |
|---|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | சொத்துக்கள் குறை உபயோகமாக காணப்படுதல் |
| | (ii) | சொத்துக்கள் மூலதனமாக்கப்படாதிருத்தல் |
| | (iii) | சொத்துக்களின் உரித்து கையேற்கப்படாமை |
| (ஆ) கணக்கீடு | | முறையாக புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் நாளதுவரையாக்கப்படாமை |
| (இ) வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | (ii) | குத்தகை ஒப்பந்தங்களை முறையாக மேற்கொள்ளாமை |
| | (iii) | உள்ளக பரீட்சித்தல்களை மேற்கொள்ளாமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கடன்பட்டோர் கடன்கொடுத்தோர் | (i) | சரியான முறையில் கணக்கு வைக்கப்படாமை |
| | | (ii) | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் தீர்வு மேற்கொள்ளாமை |
| (உ) | உள்ளகக் கட்டுப்பாடு | (i) | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாமை. |
| | | (ii) | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் பேணப்பட்டிராமை |